# பத்திரிக்கை செய்தி

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் அரசின் வழிகாட்டுதல்களின்படி, ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் -1 மற்றும் தாள் -2 முறையே 29.04.2017 மற்றும் 30.04.2017 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில், முதன்மைக் கல்வி அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்காணும் மையங்களில் 06.03.2017 முதல் 22.03.2017 வரையுள்ள நாட்களில் (ஞாயிற்றுகிழமை தவிர) காலை 9.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை விற்பனை செய்யப்பட உள்ளன. விற்பனை மையங்கள் தொடர்பாக, மாவட்ட வாரியான விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்திலும் காணலாம். ஒரு விண்ணப்பக் கட்டணம் ரூ.50/-ஐ தொகையாக அளித்து விண்ணப்பத்தினை விற்பனை மையங்களில் பெற்றுக்கொள்ளலாம். ஒரு நபருக்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே வழங்கப்படும். தாள் - 1 மற்றும் தாள் - 2 ஆகிய இருதேர்வுகளை எழுத விரும்பும் விண்ணப்பதாரர் தனித்தனியான விண்ணப்பங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

| வ.எண் | விண்ணப்பம் விற்பனை செய்யப்படும் இடங்கள் |
|---|---|
| 1 | அரசு மேல்நிலைப்பள்ளி, ஈத்தாமொழி |
| 2 | அரசு உயர்நிலைப்பள்ளி, ஆலங்கோட்டை |
| 3 | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, இரணியல் |
| 4 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கடியப்பட்டணம் |
| 5 | அரசு உயர்நிலைப்பள்ளி, செருப்பாலூர் |
| 6 | அரசு உயர்நிலைப்பள்ளி, இரவிபுதூர்கடை |
| 7 | அரசு மேல்நிலைப்பள்ளி, கல்குளம் |
| 8 | அரசு உயர்நிலைப்பள்ளி, மூலச்சி |
| 9 | அரசு மேல்நிலைப்பள்ளி, நல்லூர் |
| 10 | அரசு மேல்நிலைப்பள்ளி, நட்டாலம் |
| 11 | அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்புறம் |
| 12 | அரசு உயர்நிலைப்பள்ளி, களியக்காவிளை |
| 13 | அரசு மேல்நிலைப்பள்ளி, தேங்காப்பட்டணம் |
| 14 | அரசு உயர்நிலைப்பள்ளி, கீழ்குளம் மேற்கு |
| 15 | அரசு மேல்நிலைப்பள்ளி, திட்டுவிளை |
| 16 | அரசு உயர்நிலைப்பள்ளி, ஆரல்பெருமாள்புரம் |
| 17 | அரசு உயர்நிலைப்பள்ளி, வடலிவிளை |
| 18 | எஸ்.எல்.பி. மகளிர் உயர்நிலைப்பள்ளி, நாகர்கோவில் |

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில், முதன்மைக் கல்வி அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்காணும் மையங்களில் 06.03.2017 முதல் 23.03.2017 வரையுள்ள நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை (ஞாயிற்றுக்கிழமை தவிர) திரும்ப பெறப்படும். விண்ணப்பங்கள் வாங்கப்பட்ட மாவட்டங்களிலேயே திரும்ப அளிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு மாவட்டத்தில் விண்ணப்பம் பெறப்பட்டிருப்பினும், மற்றொரு மாவட்டத்தில் பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை அளிக்கலாம்.

| **வ.எண்** | **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப பெறப்படும் இடங்கள்** |
|---|---|
| 1 | எஸ்.எல்.பி. மகளிர் உயர்நிலைப்பள்ளி, நாகர்கோவில். |
| 2 | மாவட்டக் கல்வி அலுவலகம், தக்கலை. |
| 3 | அரசு உயர்நிலைப்பள்ளி, களியக்காவிளை |

**திருமதி. பாலா,**
**முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)**
**கன்னியாகுமரி மாவட்டம்.**